# சம்மாந்துறை பிரதேச சபையின் 07 வது பொது கூட்டறிக்கை
# 2018.09.11

சம்மாந்துறை பிரதேச சபையின் 07 ஆவது அமர்வு 2018.09.11 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப். ஏ.எம்.எம் நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. திரு. வீ. ஜெயச்சந்திரன் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப். ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப். எஸ்.எம்.எம். முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப். ஏ. அச்சி முஹம்மட் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. ஜனாப். யூ.எல். அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. திருமதி. ஆர். வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 08. திரு. என். கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப். ஏ.சி. முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப். எம்.ரீ. பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப். ஐ.எல்.எம். மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 12. ஜனாப். ஏ.எம்.எம் றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப். ஏ.எல்.எம். ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 14. ஜனாப். எஸ். நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. ஜனாப். ஏ. யூசுப் லெப்பை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி. கே.எம். இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி. எம்.எஸ். சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி. எஸ்.எம். சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 19. திருமதி. கே.எல். சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 20. ஜனாப். வை.பீ.எம். முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப். எம் ஏ.கே. முஹம்மட் | செயலாளர் |
| 02. திருமதி. ஏ.எல். நுஸ்றத் பானு | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்**
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் இந்த 07 வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இந்த அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இந்தக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் பிரேரித்து ஆமோதிக்கலாம்.

**தீர்மானம் 01**
சென்ற மாதக் கூட்டறிக்கையினை ஏற்றுக் கொள்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்தக்காலகட்டத்தில் அனைத்து கௌரவ உறுப்பினர்களுக்கும் ஊரில் அபிவிருத்தி நடக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தங்களால் முடிந்த அமைச்சர்களைச் சந்தித்து 200 க்கும் மேற்பட்ட Estimate செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இருப்பது இன்னும் 03 மாதங்கள் அதற்குள் இந்த வருடத்திற்குரிய அபிவிருத்தி வேலைகளை நாம் செய்து முடிக்க வேண்டும். அந்தவகையில் நமது கௌரவ உறுப்பினர்களின் சிபார்சின் மூலம் நமது சபைக்கு இன்று வரை கிடைத்த வேலைத்திட்டங்கள். இவைகள் ஆரம்பிப்பதற்கு முதல் சபையின் அங்கீகாரம் பெறுவது சம்பிரதாயம்.

கௌரவ உறுப்பினர் மாஹிர், கௌரவ உறுப்பினர் நளீம் அவர்களின் பரிந்துரையில் நகர திட்டமிடல் நீர் வழங்கள் வடிகால் அமைப்பு அமைச்சினால் அங்கீகரிக்கப்பட சில வேலைத்திட்டங்களும், மாகாண சபை விளையாட்டுத் துறை அமைச்சினால், ஸ்ரீ லங்கா சுததந்திரக் கட்சியின் அங்கத்தவர்களினால் சிபார்சு செய்யப்பட்ட 05 வேலைத்திட்டங்களும், கௌரவ உறுப்பினர் யூசுப் அவர்களின் பரிந்துரையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் சில வேலைத்திட்டங்களும், அகில இலங்கை மக்கள் காங்ரஸ் சார்பாகவும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்தவர்களின் வேண்டுகோளுக்கமைவாக 55000 ரூபா வீதம் 100 மலசல கூடங்களுக்கான அங்கீகாரம் போன்ற பல வேலைகளை நாம் இந்த வருடத்திற்குள் செய்து முடிக்க வேண்டும்.

இவ் வேலைத்திட்டங்களை பரிந்துரைத்த கௌரவ உறுப்பினர்கள், நிர்வாகத்துடன் இணைந்து நமக்கிருக்கும் சட்ட திட்டங்களுக்கு அமைவாக வெகு விரைவில் அதனை செய்வதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும். சபையினால் செய்யப்படும் சகல வேலைகளும் தரத்தில் எந்த விதத்திலும் குறையக் கூடாது. அதில் சபை மிகவும் கவனமாக இருக்கும். ஓவ்வொரு வேலையையும் ஆரம்பிப்பதற்கு முதல் கண்டிப்பாக நான் கௌரவ உறுப்பினர்களுடன் சேர்ந்து அதனைப் பார்வையிட்டு ஒரு சம்பூரனமான வேலையாக முடிக்க வேண்டும். அதாவது, பாதையில் வரக்கூடிய தடைகள், வேறு பிரச்சினைகள் எல்லாவற்றையும் உள்வாங்கி அபிவிருத்தி வேலைகளை செய்யும் போது அனைத்து விடயங்களும் உள்வாங்கப்பட்டு இருப்பதாக இருக்க வேண்டும் என்பது இந்த சபையின் நோக்கமாகும். அதனை நிறைவேற்றுவதற்கு நீங்களும் ஒத்தழைப்பு வழங்குவீர்கள் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வளத்தாப்பிட்டி சிறாஜ் வீதி குறிப்பிடப்பட்டுள்ளது. அது யாரால் முன்மொழியப்பட்டது? என்ன வீதி என்று குறிப்பிட முடியுமா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கட்சி மூலம் அனுப்பப்பட்ட விடயமாகையால் அதனை நான் உங்களுக்கு பின்னர் அறியத்தருகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல். அஸ்வர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது ஊருக்காக ஏனைய பல்வேறுபட்ட அமைச்சுகளுக்கூடாக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் வந்ததற்காக நன்றியைத் தெரிவித்தவனாக, அந்தப் பிரதேசத்தில் இருக்கின்ற மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களையும் உள்வாங்கியதாக வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் எங்களை அவமதிப்பது போல் ஆகிவிடும். நாங்கள் அபிவிருத்தி வேலைகளைத் தடை செய்ய வில்லை. எங்களையும் உள்வாங்கி செய்தால் சிறப்பாக இருக்கும். அதற்கு அந்தந்த திணைக்களங்களுக்கு அறிவித்தல் கொடுக்க வேண்டும். வட்டாரத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை உள்வாங்கி வேலைத்திட்டங்கள் ஆரம்பிக் வேண்டும் என்று அறிவித்தல் விடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சென்னல் கிராமத்தில் வாராந்த சந்தைக்கு 02 million ரூபா ஒதுக்கப்பட்டதாக கூறியிருக்கின்றீர்கள் இத்திட்டத்திற்கு நகர திட்டமிடல் அமைச்சின் மூலம் 03 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்தக் காலத்திற்குள் செய்து முடிக்க இயலாமல் போய்விடும் என்ற காரணத்திறகாக இந்நிதியை பெற்றுக் கொள்ள முடியாமல் இருக்கின்ற போது 02 million வேலைகளை ஆரம்பித்தால் வருகின்ற பணத்திற்கு வேலைகள் எதுவும் செய்ய முடியாமல் போய்விடும். உதாரணத்திற்கு கடந்த வருடம் சென்னல் கிராமம் மருதமுனையார் வீதியை காபட் வீதியாக செப்பனிடுவதற்கு 02 கோடி 24 இலட்சம் நகர திட்டமிடல் அமைச்சினால் நிதி ஒதுக்கப்பட்ட பின்னர், அங்கு பார்க்கின்ற போது 65 இலட்சம் செலவில் பொருத்துக்கல் வீதி வடிகான் இல்லாமல் செய்யப்பட்டது. இதன் மூலம் அந்தக் கிராமங்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகள் இல்லாமல் போய்விட்டது. எனவே, சந்தை விடயத்தை கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் அஸ்வர் அவர்கள் கூறிய விடயம் கவனத்தில் கொள்ளப்பட்டது. சபை ஆரம்பிக்கப்படுகின்ற போது தவிசாளர் அவர்கள் கூறினார்கள் எந்த ஒரு வேலைத்திட்டமாக இருந்தாலும் அந்த வட்டாரத்தின் உறுப்பினர்கள் நிச்சயமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்றும், அந்த விடயங்கள் இங்கு பட்டியலில் வந்தவரா, தெரிவு செய்யப்பட்டு வந்தவரா என்பதல்லாமல் ஒவ்வொரு வட்டாரத்திலும் போட்டியிட்டவராவது இருக்கின்றார்கள். அங்கு வேலைகள் நடைபெறுகின்ற போது சிபார்சு செய்யப்பட்ட உறுப்பினர்களுடன், அந்த வட்டாரத்தில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினரையும் அனுசரித்துக் கொண்டு போவது ஆரோக்கியமாக இருக்கும் என்பது எனது அபிப்பிராயமாகும்.

**கௌரவ உறுப்பினர் எம்.ரீ. பௌசுள்ளாஹ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, RDA இனால் நூர்பள்ளி வீதிகள் செய்யப்பட்டுள்ளது. அதில் தவிசாளரின் புகைப்படமும் இல்லை நூர்பள்ளி லேன் அதற்குரிய பெயரும் அல்ல. 1987 ஆம் ஆண்டு அதற்கு முன்னுள்ள வீதிக்குத்தான் நூர்பள்ளி வீதி என பெயர் குறிக்கப்பட்டது. தற்போது 2018.09.15 ஆம் திகதி வேலைத்திட்டம் முடிவுற்றதாகவும் இருக்கின்றது. ஆனால் இன்னும் 15 ஆம் திகதி வரவில்லை. எனவே, அதில் தவிசாளரின் படம் போட வேண்டும் அத்தோடு அதன் பெயர் மாற்றப்பட வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சி. முஹம்மட் சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று தேசிய அரசியல் போட்டி காரணமாக உள்ளூராட்சி அதிகாரங்கள் குறைக்கப்பட்டு சகல நிலையான அபிவிருத்திகளும் பிரதேச செயலகங்களின் மூலம் நடைமுறைப்படுத்துகின்ற போது, அபிவிருத்திகளை சபையின் அங்கீகாரத்தோடு உங்களது ஆலோசனைகளோடும் அச்செயற்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அதற்கான நடைமுறையை உரிய முறையில் மேற்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களின் கருத்துக்களை உள்வாங்கியவனாக, இது இஸ்லாமிய புது வருட ஆரம்ப நாள் அனைவருக்கும் வாழ்த்தியவனாக, புது வருடம் நமது ஒற்றுமையின் சின்னமாக இருக்க வேண்டும் என்று பிரார்த்தித்தவனாக,

ஆரம்பத்தில் கூறியவாறு திட்டங்கள் அனைத்தையும் வாசித்ததற்குக் காரணம் நமது சபையின் அங்கத்தவர்கள் அனைவரும் எந்தக்கட்சியின் அங்கத்தவர்களாக இருந்தாலும் சபையின் கௌரவ உறுப்பினர்கள், கூட்டு அரசாங்கத்தின் பங்காளிகள். நமக்குள் அரசியல் முரண்பாடு இருந்தாலும் ஊரின் அபிவிருத்தி என்று வரும்போது அனைத்து விட்டுக் கொடுப்புகளும் செய்து ஒற்றுமையாக வட்டாரங்களில் உள்ள அனைவரையும் உள்வாங்கி அதாவது பரிந்துரைத்தவர், தவிசாளர், அந்தப் பகுதியில் போட்டியிட்டவர் அனைவரையும் உள்வாங்கி ஒழுங்கான முறையில் செய்ய வேண்டும். நான் உங்களிடம் பணிவாக வேண்டிக்கொள்வது தயவு செய்து நீங்கள் ஏதாவது திட்டத்தை

முன்மொழிவதற்கு முன் என்னுடனும், சபையில் கடமையாற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுடனும் கலந்துரையாடி அவ்விடயத்தை எவ்வாறு செய்யலாம், எப்படி பரிந்துரைக்க வேண்டும் என்ற அறிவுரையைப் பெற்று செய்யும் போது அது சம்பூரணமாகும்.

புளக் பேவிங் செய்ய முடியாத இடத்தில் புளக் பேவிங் கொண்டு வந்ததனை நான் நிறுத்தியவுடன் அது பல பிரச்சினையாகியது. எனது அனுபவத்தில் புளக் பேவிங் ஒரு உறுதியான நிலத்தில் கொங்றீட்டை விட உகந்தது. காரணம் கொங்றீட் நிரந்தரமானது. புளக் பேவிங் தேவைப்படும் போது கலட்டிப் பூட்டலாம். சம்மாந்துறையைப் பொறுத்தவரை ஹிஜ்ராவில் இருந்து 100 அல்லது 150 M வட்டத்திற்கு நாம் புளக் பேவிங் செய்யலாம். ஏனென்றால் உறுதியான மலைப்பிரதேசம். ஆனால் இரண்டு பக்கமும் வடிகான் இருக்க வேண்டும். உதாரணமாக, மல் 01 ஐப் பார்த்தால் விளங்கும். ஆனால் வேலைத்திட்டங்களை கொண்டு வரும்போது இவைகளைக் கவனத்தில் கொண்டு கலந்தாலோசித்து வேலைகளைச் செய்ய வேண்டும்.

**சென்னல் கிராம வாராந்த சந்தை:** நிச்சயமாக கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களின் கருத்து அவசியமானது. சந்தை என்று வரும் போது 02 Million மூலம் மலசலகூடம் கட்ட முடியும் என்றால் அதனைக் கட்டலாம். ஏனென்றால் 02 Million சந்தை கட்டுவதற்கு போதாது. எனவே எல்லா வேலைத்திட்டங்களையும் கலந்தாலோசித்து செய்யப்படும்.

**பதாதைகள்** தொடர்பாக பாக்கின்ற போது அதில் எனது படம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. நமது ஊரின் அரசாங்கத்தின் பங்காளிகளாக 02 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர் அவர்களும், நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் உட்பட அவ்வேலைத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்த அமைச்சரையும் போடுவதுடன் அதற்கு மேல் ஒரு சமத்துவம் இருக்க வேண்டும். நிச்சயமாக அந்தத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் படம் இருக்க வேண்டும் சபையின் பிரதிநிதியாக தவிசாளரின் படம் அதன் பின்னர் உறுப்பினர்களின் படம் வர வேண்டும்.

இன்று சம்மாந்துறையில் வசிக்கும் திகாமடுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சம்மாந்துறை, அம்பாரை ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அவர் உள்வாங்கப்பட வேண்டும். சபையால் அரசியல் மோதல்கள் வரக்கூடாது. இதில் நான் உறுதியாக இருக்கின்றேன். இது ஊரின் சபை மக்களால் அமைக்கப்பட்ட சபை. சபைக்குள் வந்தால் நமக்குள் ஊரின் அபிவிருத்தி தொடர்பான சிந்தனைதான் வரவேண்டும். அதாவது கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் கூறியது போல் 03 கோடி ரூபா வேலை செய்ய இருக்கும் போது நாம் 02 Million மூலம் வேலை செய்தல் என்று இல்லாமல் அதன் மூலம் என்ன செய்ய முடியுமோ அதனைச் செய்யலாம். இதற்கு உறுதுணையாக இருக்க வேண்டுமே தவிர அதற்குள் குழப்பத்தை உண்டுபண்ணக்கூடாது. எனவே இவைகளை உள்வாங்கி கவனமாக செய்ய வேண்டும். அதில் நான் மிகவும் உறுதியாக இருப்பேன். நமக்குள் ஒற்றுமை இருக்கின்றது என்பதை நாம் காட்ட வேண்டும். நான் உங்கள் அனைவரையும் பணிவாக வேண்டிக் கொள்வது இந்த விடயங்களில் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து வெற்றிகரமாக செயற்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

### கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:

கௌரவ தவிசாளர் அவர்களே, சற்றுப் பிந்தி வந்ததற்காக உங்களிடம் மண்ணிப்புக் கேட்டவனாக பாதைகள் அபிவிருத்தி செய்தல் விடயமாகவும் படம் இடுவது சம்பந்தமாகவும் தங்களது படம் தேவையில்லை என்றும் சொல்கின்றீகள். அவ்விடத்தில் கண்டிப்பகாக தவிசாளரின் படம் இருக்க வேண்டும். காரணம் பின்னர் வேறு ஒருவர் தவிசாளராக வரும் போது உங்களுக்குரிய கௌரவம் இல்லாமல் போய்விடும். கண்டிப்பாக பிரதேச சபையில் எந்தத் தவிசாளர் இருக்கின்றாரோ அவர் பாதைகள் புனரமைக்கும் போது கௌரவிக்கப்பட வேண்டும். அதனைப் புறக்கனித்தால் நமது சபையைப் புறக்கனிப்பது போன்றது.

ஒவ்வொரு பாதைகளும் சிறப்பாக செய்ய வேண்டும். உள்ளராட்சி சபைகளால் சில சட்டங்களை செய்ய முடியும் என்று நினைக்கின்றேன். அதன் அடிப்படையில் பாதைகள் போடப்பட்டால் அதன் மீள் காசி ஒரு வருடமாக இருந்தால் பாதை செய்பவர்கள் பாதைக்கு குறைந்தது 10 வருடமாவது

பிரதேச சபையால் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திட வேண்டும். காரணம் அதற்கு வழங்கப்படுகின்ற பணம் 10 வருடங்களாவது பயன்பட வேண்டும். வீதிகள் சீராக பயன்படுத்தப்பட்ட வில்லை என்றால் உண்மையில் நாம் இம்மையிலும் மறுமையிலும் பதில் கூறவேண்டி ஏற்படும். சில பாதைகள் இன்னும் பிழையாக காட்சியளிக்கின்றது. இது மிக வருத்தத்திற்குரிய விடயமாகும்.

நாம் ஏற்கனவே முன்னுதாரனமாக சில பாதைகள் போட்டுள்ளோம். அதனைப் பார்கலாம். சில காரணங்களால் பிழையாக போடப்பட்ட பாதைகள் இனிவரும் காலங்களில் அவ்வாறு போடப்படாமல் நமது கட்டுக் கோப்புக்குள் செய்ய வேண்டும். நம்மால் முடிந்தளவு வேலைத்திட்டங்களைப் பெற்றுக் கொண்டு வந்து நமது ஊரிற்குரிய தேவைகளை பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். எந்த ஒரு சட்டத்தையும் புதிதாக உருவாக்க முடியுமா என்பதை கௌரவ தவிசாளர் அவர்கள் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, சில விடயங்களுக்கு என்னால் உடன்பட முடியாது என்று நினைக்கின்றேன். கௌரவ உறுப்பினர்கள் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து மிகவும் சிரமத்திற்கு மத்தியில் இவ் வேலைத்திட்டங்களைக் கொண்டு வருகின்ற நேரத்தில் இதில் எதுவுமே சம்பந்தப்படாத ஒருவரின் படத்தைப் போடுவது எந்த விதத்திலும் நியாயமில்லை என்று நினைக்கின்றேன். கௌரவ பாராளுமன்ற உறுப்பினரின் படத்தைப் போடலாம் காரணம் அவர் சம்மாந்துறை, அம்பாரை அபிவிருத்தி குழுத் தலைவராக இருக்கின்ற காரணதினால் அதனைப் போடலாம். நீங்கள் பிரதேச சபை தவிசாளராக இருக்கின்ற காரணத்தினால் உங்களது படத்தைப் போடலாம். இதைத்தவிர மேலதிகமாக வேறு ஒருவரின் படத்தைப் போடுவது என்னைப் பொறுத்தவரையில் நியாயமற்ற விடயமாகும்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, வீதிகளுக்கு பதாதை இடுவது சம்பந்தமாக எனக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் நகரத்திட்டமிடல் நீர் வழங்கள் வடிகால் அமைச்சினால் தெரிவு செய்யப்படுகின்ற பாதைகளோ, அல்லது வேறு எந்த வேலைத்திட்டமாக இருந்தாலும் இவ்வாறுதான் பாதைகள் அமைக்கப்பட வேண்டும் என்று அவர்களுடைய திட்டம் ஒன்று இருக்கின்றது. அதாவது வேலைத்திட்டங்கள் முடிவடைந்ததன் பின்னர் அந்தப்பாதையின் திறப்புவிழாவின் போதுதான் பதாதை பொருத்தப்பட வேண்டும் என்ற சட்டதிட்டங்கள் அவர்களுடைய அமைச்சில் இருக்கின்றன.

அதே போல் வீதிகளோ அல்லது வேறு ஏதாவது வேலைத்திட்டங்களோ செய்வதற்கு முன் பார்வியிடவேண்டும் என்று தவிசாளர் அவர்கள் கூறியதை ஏற்றுக் கொள்கின்றேன். அவ்வாறான வேலைத்திட்டங்களை சபையினூடாகத்தான் மதிப்பீட்டறிக்கை செய்கின்றோம். மதிப்பீட்டறிக்கை செய்கின்ற சந்தர்ப்பத்தில் பாதைகளை கௌரவ தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள் உட்பட பார்வையிட்டால் நன்றாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன். பாதைக்கான பணம் ஒதுக்கப்பட்ட பின்னர் அதில் தலையிட்டு மாற்றம் செய்யும் போது சிக்கலான நிலை ஏற்படுகின்றது. இன்று நகர திட்டமிடல் நீர் வழங்கள் வடிகாலமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட பாதைகளின் வேலைத்திட்டங்கள் இதனால்தான் இழுபறியாக இருப்பதற்கு காரணம்.

மல்கம்பிட்டி வட்டாரத்தின் உறுப்பினர் என்ற வகையில் நானும், கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களும் வாராந்த சந்தைக்கு சபையின் அனுமதியுடன்தான் வரைபடத்தையும், மதிப்பீட்டறிக்கையையும் சமர்ப்பித்தோம். எனவே நீங்கள் கூறியவாறு மக்களின் நன்மைக்காக அந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

அண்மையில் சம்மாந்துறை ஒருங்கினைப்புக் குழுக் கூட்டத்தில் பேசப்பட்ட சென்னல் கிராமம் - 02 இல் அமைந்துள்ள 40 வீட்டுத் திட்ட பிரதேசத்தில் சுற்றுலா மையம் அமைக்கின்ற திட்டம் ஊரின் அபிவிருத்திக்காக செய்ய வேண்டுமாயின் சுற்றுலா மையம் அமைப்பதைவிட அந்தப் பிரதேசத்தில் இருக்கின்ற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது மிகவும் சிறந்தது என்று நான்

நினைக்கின்றேன். அங்கிருக்கின்ற மக்கள் எந்தவிதமான அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இன்றும் கூட வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இரவு வேலைகளில் சீராக செல்லக்கூடிய பாதைகள் இல்லை. அதே போல் அந்தப் பிரதேசங்களில் இன்று காட்டு யானைகளின் அட்காசங்களுக்கு மத்தியில் மக்கள் மிகவும் கஸ்டப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கின்ற சூழலில், வீதி மின் விளக்குகள் கூட இன்னும் பொருத்த வேண்டிய தேவைப்பாடு இருக்கின்ற அந்தப்பிரதேசத்திலே இவ்வாறான ஒரு சுற்றுலா மையத்தை அமைப்பதன் மூலம் அதனை பார்வையிடுவதற்கோ, அல்லது அங்கு இருக்கின்ற மேலதிக விடயங்களை செய்வதற்காக நாட்டின் பல்வேறு பக்கத்திலும் இருந்து பல மதத்தவரும் அந்த இடத்திற்கு வரக்கூடிய சந்தப்பம் இருக்கின்றது. எனவே, அவ்விடத்தில் பல மதத்தவரின் மத வழிபாடுகளை ஏற்படுத்தவதற்கு வழிவகுக்கின்ற ஒரு சந்தப்பமாக நாங்களே உருவாக்கிக் கொடுக்கின்ற ஒரு சூழ்நிலை இன்று அந்தப் பிரதேசத்தில் இருப்பதாக நான் கருதுகின்றேன்.

இது எனது தனிப்பட்ட அரசியலுக்கான கருத்தல்ல. மக்களுடைய ஊரினுடைய நலனை முன்வைத்தவனாக இந்தக் கருத்தை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். காரணம் அந்தப்பிரதேச பள்ளிவாசல் தலைவர்கள் அதே போல் சமூக சேவை அமைப்புக்கள் பிரதேசத்தின் முக்கியஸ்தர்கள் அனைவரையும் ஒன்றினைத்து கடந்த 05 ம் திகதி சிறிய கலந்தரையாடலிலே இந்த முடிவு எட்டப்பட்டது. எனவே இந்த விடயத்தை சபையின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன். சுற்றுலா மையம் அமைப்பது தொடர்பாக தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களின் கருத்துகளுக்கமைவாக, பதாதைகள் தொடர்பாக ஒவ்வொரு அமைச்சுக்கும் வழிகாட்டல் இருக்கின்றது. அந்தந்த அமைச்சுக்கு எழுத்து மூலம் அறிவித்து அவர்களிடம் அதனைப் பெற்று அதற்கமைய செய்து கொள்ளலாம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற அபிவிருத்தி வேலைகளுக்கு உள்ளூராட்சி தேர்தல் காரணமாக பதாதைகள் போடப்படாமல் விடப்பட்டது. அந்த நேரம் வந்த Funding Agent சொன்ன முறையின் படி சில பதாதைகள் போட வேண்டி இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
**சென்னல் கிராம சந்தை விடயம்:** அதனை எவ்வாறு அமைக்க வேண்டும் என்று சபை மூலம் முடிவெடுக்க வேண்டும்.

**சுற்றுலா மையம்:** கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் Dr.இஸ்மாயில் அவர்களினால் முன்வைக்கப்பட்டது. அதனை நிச்சயமாக நடைமுறைப்படுத்தப்படும் போது அந்தப் பகுதியில் வாழும் மக்கள் அனைவரையும் அரசியல் ரீதியாக ஒன்று கூட்டாமல் நிர்வாக ரீதியில் ஒன்று கூட்டி கௌரவ பாராளுமன்ற உறுப்பினரையும் அழைத்து அவரின் கருத்துக்களை முன்வைத்து அதன் பின் ஒரு முடிவெடுத்து அதனைத் திட்டமிடலாம் என்பதுதான் எனது எண்ணம். இது அவரின் முன்மொழிவு இதனை DCC யிலும் முன்மொழிந்தார். ஆனால் செயற்படுத்தப் போவது நமது சபை இதனை செயற்படுத்துவதற்கு முன் மதிப்பீட்டறிக்கை போன்றவைகளை செய்வது நிச்சயமாக நமது சபை மூலம்தான். எது செய்தாலும் அப்பிரதேச மக்களின் அபிப்பிராயத்தைப் வெற வேண்டும். காரணம் பயனாளிகளோ, பங்காளிகளோ அம்மக்கள்தான்.

அவ்விடத்தில் Hotel கட்டுவதல்ல அவரின் திட்டம் ஒவ்வொரு வீட்டுக்கும் அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து அவர்களால் முடியுமான நமது சம்பிரதாயமான உணவுகள், பாய் பின்னல் போன்ற கைத்தொழில்களை செய்து வெளி மக்கள் வந்து நமது மூதாதேயர்கள் எவ்வாறு வாழ்ந்துள்ளார்கள் என்றும், நமது வழிமுறைகள் என்ன என்று அறிந்து கொள்வார்கள் என்பது தான் அவரின் திட்டமாகும். நாம் அவரின் கருத்தை உள்வாங்க வேண்டும். நாம் அவரையும்

அழைத்து அந்தப் பகுதியில் உள்ள பள்ளிவாசல் தலைவர்கள், சமூக அமைப்புக்கள், கௌரவ உறுப்பினர்கள், வேற்பாளர்கள் அனைவரையும் சேர்த்து ஒரு கலந்துரையாடல் செய்து அதனைத் தீர்மானிக்கலாம்.

**பாதைகளுக்கு பெயரிடல்** பற்றி நாங்கள் கடிதத்துடன் ஒரு படிவமும் அனுப்பியிருக்கின்றோம். தயவு செய்து உங்கள் பங்களிப்புகளை இந்த மாத இறுதிக்குள் செய்து தாருங்கள். நாட்கள் சென்றால் அதனை செய்ய முடியாது. உங்களுக்குத் தந்திருக்கின்ற மாதிப்படிவத்தில் அதன் விபரங்களை பூரணப்படுத்தி முன் மொழியுங்கள் பின்னர் ஊர் பெரியார்களை அழைத்து மற்ற வேலைகளைச் செய்வதற்கு 30 ஆம் திகதிக்கு முன்னர் அதனை செய்து தர வேண்டும்.

**தீர்மானம் 02**
சென்ற மாதம் 02.08.2018 தொடக்கம் 31.08.2018 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அங்கீகாரம் வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பாத்திமா பாலர் பாடசாலைக்கு 972 ரூபாவும் பிஸ்மில்லா பாலர் பாடசாலைக்கு 240 ரூபாவும் மின்சாரக் கட்டணம் வந்துள்ளது. ஆனால் 02 பாடசாலைகளும் 03 மணித்தியாலங்கள்தான் திறக்கப்பட்டிருக்கும். எனவே பாத்திமா பாலர் பாடசாலை 972 ரூபா அதிகமாக வருவதற்கு என்ன காரணம் என்று சபைக்கு அறிவித்தால் நன்றாக இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சில வேளை 02 மாதத்திற்கான கட்டணமாகவும் இருக்கலாம். என்ன காரணம் என்பதனை செயலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**தீர்மானம் 03**
எதிர்வரும் 2019 இல் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான Base Line Survey பரீட்சையை நடாத்த வலயக்கல்வி அலுவலகத்திற்கு நிதி வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.எம். மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதனை நாம் சென்ற சபையில் வெற்றிகரமாக செய்து வந்த விடயம் கல்விக்குப் பங்களிப்பாக வலயக்கல்வி அலுவலகத்துடன் இணைந்து அதற்குரிய செலவீனத்தை சபையினால் செய்தால் சிறப்பாக இருக்கும்.

**தீர்மானம் 04**
எமது சபைக்குச் சொந்தமான PD - 1845 இலக்க வாகனம் 140,000 Km ஓடியிருப்பதால் முழுமையாக சேவிஸ் செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இது சபையின் வாகனம் உண்மையாக ஒரு சாதனை 06 வருடம் 1400000 Km Regular Service உடன் மட்டும் ஓடியுள்ளது. இன்னும் Brake Lining கூட Original மாற்றவில்லை. இதற்கு Company சென்று முழுமையாக Service செய்யப்பட்டது. ஒரு செட் டயர் மாற்றப்பட்டுள்ளது. இதற்குரிய பாராட்டு அதன் சாரதியான SA.ஜெமீல் அவர்களுக்கே சேர வேண்டும்.

**தீர்மானம் 05**

எமது சபைக்குச் சொந்தமான JCB, ZA-5277 இலக்க வாகனத்தினை சேவிஸ் செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

**தீர்மானம் 06**

ஒக்டோபர் மாத வாசிப்பு மாதத்திற்கான உத்தேச செலவுகளை மேற்கொள்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

வாசிப்பு மாதம் நமது சபையில் மற்ற சபைகளை விட வித்தியாசமாகக் கொண்டாடப்படுவதற்கு காரணம் மற்ற சபைகள் வெறுமனே சுற்று நிருபத்திற்கமைவாக செய்கின்றனர். ஆனால் நமக்கு இது ஒரு சந்தப்பம் ஒவ்வொரு வருடமும் ஏதாவது விடயத்தை முன்னெடுப்பது. அதாவது நீங்கள் பார்த்திருப்பீர்கள் கடந்த சபை கடைசியில் ஒரு வித்தியாசமாக, சம்மாந்துறை சரித்திரத்தின் கருப்பொருள் முன்னெடுக்கப்பட்டது. இது மக்கள் மத்தியிலும் மாணவர்கள் மத்தியிலும் ஓர் உணர்வைக் கொண்டுவந்தது. வாசிப்பு மாதத்துடன் சேர்ந்து Bookfair, எழுத்துப் போட்டி, சித்திரப் போட்டி, பேச்சுப் போட்டி, ஆக்கங்கள் போன்ற விழாக்கள் நடாத்தி மாணவர்கள் மத்தியில் ஊக்கத்தை உண்டு பன்னுகின்ற பல அம்சங்கள் அதற்குள் வருகின்றது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, வாசிப்பு மாதத்தை நடத்த வேண்டும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை. இதில் 04 விடயங்களை அவதானித்தேன். கலை கலாசார நிகழ்வு, மேடை அமைப்பதற்கான செலவு, கூடாரச் செலவு, கூட்ட மண்டப அலங்காரச் செலவு போன்ற செலவுகளை மீதப்படுத்தும் முகமாக அந் நிகழ்வுகளை எங்களது அப்துல் மஜீட் மண்டபத்தில் நடாத்தலாம் என்பது எனது கருத்து.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

உங்களுக்கு தரப்பட்டது Estimate. உங்களது கருத்துக்களை நீங்கள் கூறினால் அவைகள் சரியென்றால் ஏற்றுக் கொள்ளப்படும். அவ்விடத்தில் அப்துல் மஜீட் மண்டபத்தை பாவிப்பது நல்ல கருத்து அதனை உள்வாங்கலாம். இதில் எல்லா செலவுகளையும் செய்வதல்ல இதற்குள் இருந்து மீறாமல் வேலைகளைச் செய்வதற்கான அங்கீகாரம்தான். நிச்சயமாக அந்தக் கருத்தை நாம் உள்வாங்க வேண்டும். மேடை அமைப்பதை அவ்விடத்தில் செய்தால் நல்லது என்பது ஏற்பாட்டுக் குழுவினர்களது கருத்து. நான் தீர்மானித்தேன் மேடை அமைக்காமல் மகாவித்தியாலைய மண்டபத்தைப் பாவிக்கலாம் என்று. எனவே, ஏற்பாட்டுக் குழுவில் அங்கத்தவர்களும் சேர்ந்தால் அது நிச்சயமாக வலுவடையும்.

**தீர்மானம் 07**

சபையின் பராமரிப்பில் உள்ள ஹிஜ்றா பொதுச் சந்தையை துப்பரவு செய்வதற்காக High Pressure Washer கொள்வனவு செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.எம். மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ். நளீம் |

**தீர்மானம் 08**

சபையின் பராமரிப்பில் உள்ள கொல்களத்தினை சுத்தம் செய்வதற்காக Cold Water High Pressure Washer கொள்வனவு செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளா |

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம் றியாஸ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இவை இரண்டும் அளவில் ஒன்றுதானே? இதற்கு அவ்வளவு Presser தேவைப்படாதுதானே?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இதனை சரியாக வாசித்தால் விளங்கும் கூடியது 160 Bars இருக்கின்றது. மாடு அறுத்து இரத்தம் உறைந்து இருப்பதை சோப் போட்டு அடித்துப் பாவிப்பதற்கு கண்டிப்பாகத் தேவை இரண்டுக்கும் வித்தியாசம் உள்ளது. இதனை நீங்கள் ஈடுபட்டு மாற்றுவதென்றால் மாற்றலாம். அதில் பிரச்சினையில்லை.

**தீர்மானம் 09**

சபையின் பாவனைக்குத் தேவையான Chain Saw 24" - Gasoline, 10,000 MTRS Wheel Tape போன்ற பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ். நளீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இந்த சபையில் ஒரு Chain Saw இருந்தது 03 வருடங்களுக்குள் அது காணாமல் போய்விட்டது. அதற்கான விசாரனை நடக்கின்றன. ஒரு முடிவும் கிடைக்கவில்லை. அது இருக்கும் போது மரங்கள் அனைத்தும் சீராக்கப்பட்டது.

**தீர்மானம் 10**

"ஹெல பௌஜ்ன" ஒன்றை உருவாக்குவதற்குரிய திட்ட வரைபினை தயாரித்து நிதி ஒதுக்கீடு பெற சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.எஸ். சரீபா |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |

**தீர்மானம் 11**

நகர திட்டமிடல், நீர் வழங்கள் வடிகாலமைப்பு அமைச்சினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கீழ்வரும் 15 வேலைத்திட்டங்களை மேற்கொள்ள சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

## வேலைகளின் விபரங்கள்

01. Const. of asphalt surface road at Dharussalam East road
02. Const. of Concrete surface road at Dharussalam School 3rd cross road
03. Const. of Concrete surface drain at Fowzi Mawatha
04. Const. of Concrete surface road at Al-marjan School road
05. Const. of Concrete surface road at Hijra 10th cross road
06. Const. of Concrete surface road at Muallah Muallah Mosque road
07. Const. of Concrete surface road at Hijra cross Lane
08. Concrete Surfacing road & drainage at 150 House scheme road in Sennel Giramam - 02
09. Concrete Surfacing road & drainage at Market road in Sennel Giramam - 02
10. Concrete Surfacing road & drainage Transformer road 1st cross lane in Sennel Giramam - 02
11. Concrete Surfacing to Muneer Masjith cross in Sennel Giramam - 02
12. Concrete Surfacing to Mal - 17th Cross lane Block J west - 02
13. Concrete Surfacing to D.S. road 1st Cross lane Block J west - 02
14. Concrete Surfacing to Mal - 15th road 5th Cross lane Block J west - 01
15. Concrete Surfacing to Mal - 14th road 2nd Cross lane Block J west - 01

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.எம். மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ். நளீம் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

பிரதேச சபை உத்தியோகபூர்வமாக UDA விற்கு சம்மாந்துறை ஒரு Master Plane செய்யுமாறு அறிவித்திருக்கின்றது. சென்ற மாதம் 23 ஆம் திகதி வருவதற்கிருந்தது. ஆனால் பாராளுமன்ற உறுப்பினர் இருவரும் ஊரில் இல்லாததன் காரணமாக அந்த அமர்வு கூட்ட முடியாமல் போய்விட்டது. அதன் பிறகு Easten Province Director, Ampara Director அவர்களை அழைத்து சம்மாந்துறையை சுற்றிப் பார்வையிட்டு ஆரம்ப ஆய்வு செய்யச் சொன்னார்கள். இதற்கு முதல் உறுப்பினர்கள், பிரதேச செயலகம், EDO மார் அனைவரும் இணைந்து ஒரு திட்டமாக அதனை எடுக்க வேண்டும். சம்மாந்துறை எல்லையை ஒரு நகரமாக மாற்றுவதானால் என்ன வழியில் அதனை செய்ய வேண்டும்.

ஏனென்றால் ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு திறமையான அம்சங்கள் இருக்கும். வளத்தாப்பிட்டி, இஸ்மாயில் புரம், மல்வத்தை, மல்லிகைத் தீவு, மஜீட்புரம், நெய்நாகாடு, சென்னல் புரம் போன்றவைகள் ஒவ்வொரு வளங்களைக் கொண்டுள்ளது. இதில் வாழும் மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் நிச்சயமாகத் தேவை. காரணம் அவர்களுள் 80 வீதமானவர்கள் கூலித் தொழில் செய்பவர்கள். அவர்களுக்கு வாழ்வாதார உதவிகளைச் செய்யாமல் நாம் அவர்களிடம் வரி அறவீடு செய்ய முடியாது. உங்களுக்கு முதல் அமர்வில் VDP யின் பிரதி தரப்பட்டது. உங்கள் வட்டதரத்தின் முன்மொழிவுகளைத் தர வேண்டும்.

ஆறு மாதமாகின்றது ஆலோசனை சபைக்குரிய பெயர்கள் தரவில்லை. அவை உள்வாங்கப்பட்ட Committee ஆக இருக்க வேண்டும். அனைவரும் இணைந்து அனைத்துப் பகுதியிலும் இருந்து ஆக்க பூர்வமான கருத்துக்களை தரக்கூடியவர்களாக இருக்க வேண்டும். தயவு செய்து உங்களது பரிந்துரைகளைத் தாருங்கள். அத்தோடு VDP யையும் முன்னெடுத்து இந்த மாதத்திற்குள் இவைகளைச் செய்து முடிக்க வேண்டும். கௌரவ உறுப்பினர்கள் அச்சிமுஹம்மட், சிஹாமா

அவர்கள் பரிந்துரைத்துள்ளார்கள். தயவு செய்து அதனை செய்வதற்று எனக்கு உதவி செய்யுங்கள்.

## ஏனைய விடயங்கள்

### கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:

கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறை பிரதேசத்தில் தமிழ், முஸ்லிம் இனத்தவர்கள் வாழ்கின்றோம். கடந்த காலங்களில் பல கசப்பான உணர்வுகளில் இருந்து விடுபட்டு இன்று நாம் ஒன்று சேர்ந்து சகோதரத்துவமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். கடந்த 02, 03 நாட்களுக்கு முன் ஒரு கசப்பான நிகழ்வை வலையத்தளங்கள் மூலம் அறிந்திருப்பீர்கள். சம்மாந்துறை இஸ்மாயில் புரம் வளத்தாப்பிட்டி பிரதேசத்தில் ஒரு தமிழ் சகோததரை இஸ்லாம் மதத்திற்கு அழைத்தார்கள் என்று கூறி வீடு ஒன்றை எரித்து வலையத்தளங்களில் போட்டு மிகவும் பிரபல்யமாக பேசப்பட்டது. இது தொடர்பாக சம்மாந்துறை நிலையப் பொறுப்பதிகாரியிடம் நான் வினவிய போது இந் நிகழ்ச்சி நடந்து முடிந்து 02, 03 மணித்தியாலங்களுக்குள் ‘‘அமெரிக்கா ஹை கொமிசனில்’’ இருந்து அவருக்கு அழைப்பு வந்திருந்ததாகவும் இது சம்பந்தமான விடயத்தை தெளிவு படுத்துமாறும் கூறியிருந்தனராம்.

இது திட்டமிட்ட செயல். முஸ்லிம், தமிழ் மக்களுக்கிடையில் ஒரு கசப்பான உணர்வை ஏற்படுத்தும் முகமாக இவ் விடயம் நடந்து கொண்டிருப்பதாக கருதப்படுகின்றது. இதன் உண்மை நிலையை சபையூடாக அறிந்து சம்மாந்தறை பிரதேச சபையில் தமிழ் சகோதரர், முஸ்லிம் சகோததர் இருக்கின்றோம். இதன் உண்மை நிலையை நம் நாட்டின் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் கேட்கப்பட்ட உயர் இஸ்தானியருக்கும் என்ன நடந்தது என்ற உண்மையினை சட்டப்படியாக தவிசாளர் உட்பட அனைவரும் கையப்பமிட்டு அனுப்பி வைக்க வேண்டும் என்று கூறிக் கொள்கின்றேன்.

### கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் கூறியதற்கமைவாக, வலையத்தளங்களில் மட்டுமல்ல தமிழ் தந்தி பத்திரிகையில் ‘‘ இஸ்லாத்திற்கு மதம் மாற மறுத்த தமிழ் குடும்பத்திற்கு நடந்த கொடுமை’’ இதனை எழுதியவர் சுவிஸ் நாட்டைச் சேர்ந்த இரா துரைறட்னம். அதேபோல் இவர் ‘‘நீதி கிடைக்காத கிழக்கு படுகொலை’’ இதில் 1990 ம் ஆண்டுகளில் இடம் பெற்ற படுகொலைகளின் எண்ணிக்கை பற்றியும் புள்ளி விபரங்கள் முலம் தெரிவிப்பதோடு இதற்கு முஸ்லிம் மக்கள்தான் காரணம் என்றும் எழுதி வருகின்றார். அந்த பத்திரிகையை வாசித்தால் அனைவரும் தெரிந்து கொள்வீர்கள்.

சுவிஸ் நாட்டில் இருந்து கொண்டு இவ்வாறு பொய்யான புள்ளி விபரங்களை எழுதிக் கொண்டிருந்தால் இதனை தமிழ் மக்கள் முஸ்லிம்களைப் பற்றி தப்பபிப்பிராயம் கொள்ளக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்கின்றது. இந்த சம்பவம் இளைஞர்கள் மனதில் இன வன்முறையைத் தூண்டுகின்ற ஒரு செயலாகவே கருதப்படுகின்றது. இந்தப் பொய்யான தகவலுக்கு உடனடியாக கண்டனத் தீர்மானத்தை எடுக்க வேண்டும். சர்வதேச சமூகத்திற்கு இவர் கொடுக்கின்ற தகவலுக்கு நாங்களும் பிரதேச செயலகத்தில் மரணப்பதிவுகள் பெற்று ஆதாரங்களை வழங்கலாம். இதற்கு அப்பால் ஒருவரேனும் அவர்கள் காட்ட வேண்டும்.

ஒருவர் எதார்த்தமாக ஒரு வீட்டை எரித்த தனிப்பட்ட விடயத்தை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு சென்றால் எதிர்காலத்தில் என்ன விழைவுகள் ஏற்படப் போகின்றது என்று சபையில் இருக்கின்ற அனைத்து உறுப்பினர்களும் உண்னிப்பாக அவதானிக்க வேண்டும். இவ்வாறு இளைஞர் மத்தியில் விசங்களை ஊட்டினால் நாளைய சமுதாயத்தின் நிலை என்ன என்பதை சிந்தித்து ஒரு தீர்கமான முடிவு எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

### கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:

கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் இடம் பெற்ற கா/பொ உயர்தர பரீட்சையின் போது பர்தா அணிந்த ஒரு மாணவி பர்தாவுக்குள் தொலைபேசியை மறைத்து வைத்திருந்ததாகவும் அவர் பரீட்சை மேற்பார்வையாளரிடம் அகப்பட்டு பரீட்சை மண்டபத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார் என்ற பொய்யான செய்தி பரப்பப்பட்டது. உடனடியாக நான் பரீட்சை மேற்பார்வையாளரிடமும், வலயக் கல்வி பணிப்பாளரிடமும் இவ்வாறான சம்பவம் சம்மாந்துறையில் நடை பெற்றதா? என வினவிய போது சம்மாந்துறை வலயத்திற்குள் இவ்வாறான சம்பவம் எதுவும்

இடம்பெற வில்லை என்று கூறினார்கள். சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிம் தொடர்பு பட்டுக் கேட்டபோது அவரும் அவ்வாறான சம்பவம் இடம்பெறவில்லை என்றே கூறினார்.

ஆனால் இன்று வலையத்தளத்தில் வந்த செய்தி குறிப்பாக சம்மாந்துறை முஸ்லிம்களுக்கு அவமானத்தை ஏற்படுத்துகின்ற செய்தியாகவே வந்திருக்கின்றது. அதன் அடிப்படையில் அண்மையில் இடம்பெற்ற வளத்தாப்பிட்டி மதம் மாற்றம் விடயத்தை விசாரித்து உண்மையான நிலையை ஒரு அறிக்கையாக வெளியிடுவது சபைக்கு சாலப் பொருந்தும் என்று கூறுகின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் . வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வளத்தாப்பிட்டி இஸ்மாயில்புரம் சம்பவத்தைப் பொறுத்தவரையில் அன்று சமூக வலையத்தளங்களிலும் ஊடகங்களிலும் ஒரு தவறான செய்தியைப் பரப்பி வருகின்ற செய்தி நூற்றுக்கு நூறு வீதம் உண்மையில்லை என்பதனை உறுதிப்படுத்த நான் சாட்சி. உண்மையில் அங்கு நடந்த சம்பவமானது குறிப்பிட்ட சம்பவத்திற்குரிய நபர் இஸ்மாயில்புர கிராமத்தில் நீண்டகாலமாக வாடகை வீட்டில் வசித்து வருகின்றார்.

அங்கிருக்கும் மக்களுக்கு ஹயருக்கு ஆட்டோ ஓடி சம்பாதித்து வருகின்றவர். இந்தச் சூழ் நிலையில் அவரது மணைவி மீது அங்கு இருக்கும் ஒரு தனிநபர் ஒரு சில சேட்டைகளைச் செய்ததனால் இவர் அவரைத்தாக்கியிருக்கின்றார். இச்சம்பவம் பொலிஸில் பதியப்பட்டு வழக்காக கோட்டில் இடம்பெற்று வருகின்றது. இதனை பின்னனியாக வைத்துத்தான் பின்னர் இடம்பெற்ற சம்பவம் இடம் பெற்றதாக நான் நூற்றுக்கு நூறுவீதம் உண்மையாக அறிகின்றேன். அந்த சம்பவத்தை அவர் என்னிடம் வாய்மூலம் தெரிவித்தார். அந்தகாலகட்டத்தில் நானும் ஊரில் இருக்கவில்லை. அவர் எனது வீட்டுக்கும் வந்துள்ளார். பின்னர் தொலைபேசியில் 9.45 மணியளவில் தொடர்பு கொண்டார் நான் வீட்டில் இல்லை பிறகு சந்திக்கின்றேன் என்று கூறினேன்.

இரண்டாவது நாள்தான் எனக்கு இந்த செய்தி அறியக்கிடைத்தது. அடுத்தநாள் 9.41 க்கு வந்து என்னைத் தொடர்புகொண்டு நடந்த சம்பவத்தை கூறிவிட்டு எனக்கு இருக்க இடமில்லை என்றார் அப்போது எனது வீட்டில் சந்தப்பம் இல்லாததனால் அவரை வேறு வீட்டில் இருக்க வைத்தோம். அடுத்த நாள் வந்து எனக்கு இஸ்மாயில்புரத்தில் ஒரு வீட்டைப் பார்த்துத்தாருங்கள் என்றார். நான் வேலையாக உள்ளேன் மதியம் 02 மணிக்கு சென்று அங்குள்ள வீட்டைப் பார்ப்போம் என்று கூறினேன்.

அடுத்த நாள் 4.00 மணியளவில் பள்ளிவாசல் தலைவர்களைக் கூட்டியபோது அவருக்கு ஊர் மக்கள் அனைவரும் அனுதாபம் தெரிவித்தனர். அதில் யாரையும் குறை கூற முடியாது. இச்சம்பவத்தில் இவர்கள்தான் ஈடுபட்டார்கள் என்று கூறுவதற்கு நேரடியான சாட்சிகள் இருக்கின்றது என்று கூறி மக்கள் ஆதங்கப்பட்டனர்.

ஆட்டோ ஹயர் ஓடிய பணம் 159,000 ரூபா மக்கள் கொடுக்க வேண்டும். வைத்தியத்திற்காக அவருடன் பொலனறுவைக்குக் கூட சென்றுள்ளனர். அவருக்கான பணத்தைக் கொடுக்குமாறு நான் கேட்டுக் கொண்டேன். அதற்கு அவர்கள் உடன்பட்டார்கள். அதுமட்டுமல்ல அவ்விடத்தில் நான் கூறிய விடயம் நாம் சுனாமியால் பாதிக்கப்பட்டபோது நமக்கு உருவாக்கப்பட்ட கிராமம்தான் இது. இன்று இவரது வாழ்கையில் சுனாமி ஏற்பட்டுள்ளது. அன்று நமக்கு அனைவரும் உதவி செய்தது போல் இன்னு அனைவரும் இவருக்கு உதவி செய்ய வேண்டும். எனவே, மனிதாபிமான அடிப்படையில் உங்களால் முடிந்த உதவிகளை செய்யுங்கள். இவரது பிரச்சினை சார்ந்த விடயத்தை சட்ட ரீதியாக பொலிஸார் முடிவெடுப்பார். அதற்குள் நாம் தொடர்புபடத் தேவையில்லை. அதற்கினங்க மௌலவி அவர்களும், பள்ளித்தலைவர்களும் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். உங்களால் முடியுமான பொருட்களை பள்ளிவாசல்களுக்கு கொண்டு வந்து தந்தால் நாங்கள் இவருக்குக் கொடுப்போம் என்று கூறினார்கள்.

உண்மையில் இஸ்மாயில்புர கிராமத்தில் ஒரு பூர்வீக மக்கள் இல்லை. சம்மாந்துறை, நிந்தவூர், கல்முனைக்குடி, பிபில்லை, பொத்துவில் போன்ற ஊர்களில் இருந்து வந்த மக்கள் வாழ்கின்றனர். கலப்பு திமனம் முடித்தவர்களும் இருக்கின்றனர். அந்த மக்களுக்குள் இன்னும் ஒற்றுமை இல்லை.

இதற்கு தொடர் நடவடிக்கை செய்வதற்கு யாரும் செல்வந்தர்தர் இல்லை. அங்கு இருப்பவர்கள் அனைவரும் வறுமைக் கோட்டில் வாழ்பவர்கள்.

அடுத்து அவர் பொலிஸிடம் செல்வதற்கு என்னைக் கூப்பிட்டார். நான் கூறினேன் எனக்கு வேறு வேலை உள்ளது நீங்கள் சென்று வாருங்கள். பொலிஸ் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் நான் OIC இடம் பேசுகின்றேன் என்று கூறினேன். அதற்கு அடுத்தநாள் சென்னல்கிராமத்தில் வசிக்கின்ற ஒரு இளைஞர் என்னுடன் தொடர்பு கொண்டு கூறினார் தொலை பேசியில் வந்துள்ள தகவலைப் பாருங்கள் என்றார். அப்போதுதான் இந்தவிடயம் தெரிய வந்தது.

நான் அந்த நபரை தொடர்பு கொண்டு ஏன் இவ்வாறு செய்தாய் இது முஸ்லிம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் முரண்பாட்டை உண்டுபண்ணக்கூடிய விடயமல்லவா என்று கேட்ட போது, அவர் எனக்கு யாரும் நீதி செய்யவில்லை என்று கூறினார். நன் கடைசியாகக் கேட்டேன் உனக்கு என்ன நீதி வேண்டும் என்று கேட்டபோது எனக்டகு ஆட்டோ வாங்கித்தர வேண்டும் என்று கேட்டார்.

இதனால் பல பிரச்சினை உடனடியாக நீ அறிவிக்க வேண்டும் என்று கூறினேன். ஏனென்றால் இவர் ஊருக்கு வந்து 06வருடங்கள். இவரது மாமா, மாமி வந்து 05 வருடங்கள். அவர்கள் இஸ்லாத்திற்கு வந்துள்ளனர். அது அவர்களது தனிப்பட்ட விடயம். அவரது அண்ணன் ஒரு முஸ்லிம் பெண்ணை திருமணம் முடித்துள்ளார். இவைகள் அவர்களது தனிப்பட்ட விடயம் இதனை யாரும் கண்டிக்க முடியாது. இவரையும் யாரும் வற்புறுத்தவுமில்லை. எந்த ஒரு வற்புறுத்தலும் நடக்கவும் இல்லை. இது அவரது மணைவிக்கு சேட்டை செய்தவருடன் சண்டையிட்டதை பழிதீர்ப்பதற்காக இடம்பெற்ற செயல்தான் இது. இதனை facebook, வலையத்தளங்களில் போட்டு இதற்கு கருத்துச் சொல்லிக் கொண்டு விமர்சனம் செய்து பிரச்சினையை கூட்டுவதாகத்தான் நடந்து கொண்டிருக்கின்றது. இதனை நிறுத்த வேண்டும்.

நேற்று நாங்கள் ஒரு முடிவெடுத்தோம் ஒரு பத்திரிகையாளர் மாகாநாட்டைக்கூட்டி இச் சம்பவத்திற்கும் மதமாற்றத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை இது முற்று முளுதான பொய் என்ற செய்தியை கூற வேண்டும் என்று முடிவு எடுத்துள்ளோம்.

ஒரு சிலர் என்னிடம் தமிழ் மகனுக்கு ஒரு அநீதி நடந்திருக்கின்றது. அதனை நீங்கள் சரிசெய்யவில்லையா? என்று கேட்கின்றனர். நான் கூறினேன் பொய்யான வதந்தி அவ்வாறு நடக்கவில்லை என்றேன். இது தொடர்பாக வளத்தாப்பிட்டி மக்கள், கல்முனை மக்கள் மட்டுமல்ல எந்த மக்களும் கேட்கவில்லை. சுவீஸ்சில் இருப்பவர் எதற்காக இவ்வாறு எழுதிக் கொண்டிருக்கின்றார் என்பதுதான் புரியவில்லை. தமிழர் சேனா அமைப்பொன்று கேட்டபோதும் இது அவ்வாறல்ல தனிப்பட்ட பிரச்சினை மதமாற்றத்துடன் தொடர்புபட்டதல்ல என்று கூறினேன். நான் பேசும் போது எனது பேச்சை Recording செய்ததும் எனக்கு விளங்கியது. எங்களால் முடிந்தளவு இந்தப் பிரச்சினையை சமாளித்துக் கொண்டிருக்கின்றோம். இதே விடயத்தை பிரபல்ய ஊடகவியலாளர் சகாதேவ ராஜா Sir அவர்களுக்கும் அறிவிக்கப்பட்டது. அவரும் என்னுடன் தொடர்பு பட்டு இதன் உண்மைச் சம்பவம் என்ன என்று கேட்டார். அவரிடமும் தனிப்பட்ட பிரச்சினை மதமாற்றத்துடன் தொடர்புபட்டதல்ல என்று கூறினேன்.

என்னைப் பொறுத்தமட்டில் சம்மாந்துறை பிரதேசத்தில் காலப்போக்கில் இன்னும் நட்புறவு வளர்சியடைந்து மக்கள் மத்தியில் ஒரு குளர்படியும் வராது என்றே நினைக்கின்றேன். ஆனால் அனைத்து சமூகங்களிலும் இருக்கின்ற இளைஞர்கள் facebook இல் எழுதும் எழுத்துக்களை சிந்தித்து எழுதுவதில்லை. எனவே இதனை ஆதரவாக எழுதுங்கள். எந்த இடத்திலும் இச்சம்பவம் பொய்யானது என்று உறுதியாகக் கூறுகின்றேன். இதில் மதம் மாற்றம் சம்பந்தமான நடவடிக்கை ஒரு அனு அளவு கூட இல்லை என்று உறுதிப்படுத்துகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உண்மையாக வருத்தத்திற்குரிய விடயம். கசப்பான சரித்திரங்கள் இருக்கின்றது. ஆனால் அவைகளை பாடமாக எடுத்து வருங்கால சந்ததிக்கு ஒரு வழிகாட்டலாக இருக்க வேண்டியது நமது கடமை. நமது சமூகத்தில் உண்மைக்கு முரனான வதந்திகளைப் பரப்புவதற்கும், கசப்பான உணர்வுகளை மீண்டும் மீண்டும் மக்களுக்கு அறிவித்து இளம் சந்ததியினரை பிழையான வழியில் நடாத்தும் செய்திகளை வண்மையாகக் கண்டிக்கின்றது என்று, கௌரவ உப தவிசாளர், கௌரவ உறுப்பினர் அச்சி முஹம்மட், கௌரவ உறுப்பினர் கோவிந்த சாமி மூவரையும் உள்வாங்கி ஒரு தெழிவான அறிக்கையை ஊடகங்களுக்கு வெளியிடுவதுடன், நீஙகள் மூவரும் இருந்து சபையின் சார்பாக உண்மையான விடயத்தை தெளிவுபடுத்துங்கள்.

**கௌரவ உப தவிசாளர் . வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இன்னும் இஸ்மாயில் புரத்தில் தமிழ் குடும்பங்கள், முஸ்லிம் குடும்பங்கள் ஐக்கியமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்குள் எந்தப் பிரச்சினையும் இல்லை. அதே போல் அங்கு என்ன பிரச்சனை வந்தாலும் என்னை வந்து சந்திக்கலாம். எனவே, நாம் ஒரு அறிக்கை செய்வோம்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இன்றைக்கு எங்களது கௌரவ உப தவிசாளர் அவர்கள் அவ்விடத்தில் இல்லையானால் எவ்வளவு தூரம் பிழையாக பார்கப்பட்டிருக்கும். அதுமட்டுமல்ல அவருக்கு அக்கிராமத்தில் இருக்கின்ற உண்மைகள் விளங்குகின்றது. இதன் மூலம் விளங்க வேண்டும் எத்தனை இடத்தில் இருந்து கேட்டிருக்கின்றார்கள் என்றால், இந்த விடயம் வெளி உலகத்திற்கு எவ்வாறு செய்தி பரப்பப்பட்டிருக்கின்றது என்று நாம் விளங்கி அவதானமாக இருக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நமது ஊரில் சபைக்கும் சட்டத்திறகும் பாரிய பிரச்சினையாக உள்ள விடயம் அனுமதியில்லாத கட்டடங்கள். இன்று நமது ஊரில் 80 வீதமான கட்டடங்கள் அனுமதியில்லாமல் அமைக்கப்பட்டுள்ளது. சட்டரீதியாக ஏதாவது பிணக்கு வருகின்ற போது முதல் வரும் கேள்வி இது அனுமதி பெறப்பட்ட கட்டடமா? இது பாமர மக்களையும் பார்க்க படித்த மக்கள் அதிகமாக காணப்படுகின்றார்கள். உதாரணமாக அண்மையில் ஊரின் கல்விமான்கள் இணைந்த ஓர் அமைப்பு அவர்கள் எனக்கு ஓர் அழைப்பிதழ் தந்தர்கள். அவர்களிடம் நான் கேட்டேன் இது அனுமதியோடு கட்டப்பட்ட வீடா? அனுமதி எடுக்காமல் கட்டப்பட்ட வீடு. இன்னும் சிலர் மத்ரசா கட்டுவதற்கு 30 இலட்சம் தருமாறு உதவி கோரி வந்தார்கள். அக்கட்டத்திற்கு அனுமதி பெறப்பட்டதா? என்றால் இல்லை. ஆனால் கட்டுப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இவைகளை நாம் கவனத்தில் கொள்ளவில்லை என்றால் பாரிய நிர்வாக மாற்றம் வந்து சீர்திருத்தும் போது பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும். இவ்வாறு அனுமதியற்ற கட்டடம் எந்த விதத்திலும் பெறுமதியற்ற கட்டடமாகவே கருதப்படும். நாங்கள் போன சபையிலும் அறிவித்தல் கொடுத்து சில கால அவகாசம் கொடுத்து அதற்குள் செய்யவில்லையாயின் அதற்கான தண்டப்பணம் அறவிடப்படும் என்றும் செய்தோம். ஆனால் அது நடக்க வில்லை. இது தொடர்ந்து போகின்றது. இதனை சபை பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

இதனை எவ்வாறு முன்னெடுப்பது? 99 வீதமான வீடுகளுக்கு COC இல்லை. சபையினால் அனுமதிக்கப்பட்டபடி இந்தக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது என்று கொடுத்தால் தான் அது சட்டப்படியான கட்டடம் அது இல்லாமல் சபையால் அனுமதி எடுத்தாலும் சட்டவிரோதமான கட்டடமாகத்தான் கருதப்படும். இதில் ஒரு மாற்றம் கொண்டு வர வேண்டும். நகர சபையாக வரும்போது இன்னும் பிரச்சினை அதிகரிக்கும். இதனை எவ்வாறு மாற்றலாம்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதேபோல் நெய்நாகாட்டுப் பகுதியில் Rice Mill கட்டப்படுகின்றது. அது அவ்விடத்தில் வந்தால் வேறு வீட்டுத்திட்ட வேலைகள் எதுவும் செய்ய முடியாது. முஸ்டக் இறக்கத்திலும் மில் கட்டப்படுகின்றது. அதே போல் மத்ரசாவுக்குப் பக்கத்தில் வயலை நிறப்பி மில் கட்டப்படுகின்றது. இவைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அனுமதியில்லாமல் கட்டப்படும் கட்டடங்களைக் கண்டால் உடனடியாக நீங்கள் அறிவிக்க வேண்டும். அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கௌரவ உறுப்பினர் கூறுவது போல் Rice Mill கட்டலாம் ஆனால் அதற்குரிய பாதுகாப்பு இருக்க வேண்டும். அவை அனுமதி மூலம் தான் வரலாம்.

அடுத்த வாரம் துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட உள்ளது அனுமதியற்ற கட்டங்கள் பற்றி 2 மாத கால அவகாசம் கொடுத்து அல்லது டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முதல் அதனை சீர் திருத்திக் கொண்டுவந்து அனுமதி எடுக்க வேண்டும். அவ்வாறு செய்யாத பட்சத்தில் இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதில் குறிப்பிடப்படும். அதனை செய்யாவிட்டால் கட்டுப்பாடு இல்லாத ஊராக மாறிவிடும். UDA கேட்டால் நமக்கு தெரியாது என்று கூற முடியாது. UDA அதிகாரத்தை நம்மிடம் தந்துள்ளது. அவர்களுக்கு முறைப்பாடுகள் சென்றால் நேரடியாக நடவடிக்கை மேற்கொள்ள முடியும். அவர்களின் அதிகாரத்தை சபைக்குத் தந்துள்ளார்கள். எனவே, இதனை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

மாகாண சபையினால் கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஆலையடி வட்டை காமன்ஸ் பெக்றி வீதி 5 Million க்கும், 05 Millon பாதைகள் மல்வத்தை கிராமத்திற்கும் ஆரம்பிக்க உள்ளது. வீதிகளின் விபரங்கள் வரவில்லை. அவைகள் மிக விரைவில் நடைபெறும். மல்வத்தைக்குரிய வேலைகள் கௌரவ உப தவிசாளரின் முயற்சியினால் நடைபெறுகின்றது.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எழுத்து மூலம் அறிவிக்க வேண்டிய விடயம் காலம் போதாத காரணத்தினால் அறிவிக்க முடியாத சூழ்நிலை. ‘கரத்தை வண்டில் உரிமையாளர்கள் ஆற்று மண் அகழ்வதற்கான அனுமதி பெற்றுக் கொடுத்தல்’. அவர்களின் வாழ்வாதாரத்தை முன் வைத்து இந்த விடயத்தை கூற விரும்புகின்றேன். காரணம் இவர்கள் கரத்தை வண்டியூடாகத்தான் அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தக்கூடிய சூழ்நிலை. அதே போல் கரத்தை மாடுகளுக்கு உணவுகளைக் கொடுப்பதும் பாரிய சவாலாக உள்ளது.

இவர்கள் 06 மாதத்திற்குள் ஒரு மாதம் தான் சம்பாதிக்க முடியும். மற்ற 05 மாதங்களும் இந்த மாடுகளுக்கு உணவு கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. எனவே, அதற்கு மாற்று வழியாகத்தான் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான ஆற்று மணலை அவர்களது கரத்தைகளைக் கொண்டு கட்டடத் தேவை உடையவர்களுக்கு விற்பனைக்கான வழிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஆற்றுமண் அகழ்வது ஒரு சட்ட விரோதமான செயலாகத்தான் இன்று எமது பிரதேசத்தில் இருக்கின்றது. அதே போல் கரத்தை வண்டில் மாடு வைத்திருப்பவர்களுக்கு வாய்மொழி மூலம் அனுமதி வழங்கினார்கள். அதிகாலை 04 மணிக்கும் 08 மணிக்கும் இடையில் மணல் எடுக்க வேண்டும் என்று இருக்கின்றது. இவ் அனுமதியானது எந்த நேரத்திலும் பொலிஸ் அல்லது விசேட அதிரடிப்படையினர் அவர்களை கைது செய்யப்படுகின்ற சூழ்நிலை காணப்படுகின்றது. அந்த சந்தப்பத்தில் நீதி மன்றத்தினால் வழங்கப்படுகின்ற தண்டப்பணம் அவர்களால் சுமக்க முடியாத சுமை.

ஆற்று மணல் அகழ்கின்ற சந்தர்ப்பத்தினை 2007 ஆம் ஆண்டு எமது பிரதேசத்திலும் பிரதேச சபையினூடாக ஒரு நாளைக்கான அனுமதிப்பத்திரம் 100 ரூபா செலுத்தி கனரக வாகனங்களில் எடுத்துள்ளோம். அது ஆற்றின் நடுவிலே இருக்கின்ற மணலை வள்ளங்கள், படகுகளின் மூலம்

அகழ்ந்தெடுத்து தரையில் கொட்டி கனரக வாகனங்களில் அதனைக் கொண்டு செல்கின்ற சந்தப்ப சூழ்நிலை இருந்தது. அவ்வாறான சந்தப்ப சூழ்நிலையை பிரதேச செயலகம் கரத்தை வண்டில் உரிமையாளர்களுக்கு ஆற்று மண் அகழ்வதற்கான சந்தப்பத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். இது சம்பந்தமாக உரிய அதிகாரிகளுக்கு தெரிவித்து அதற்கான ஒரு நல்ல தீர்வினை எமது சபையின் மூலம் பெற்றுக் கொடுக்க வேண்டும். என்பது எனது வேண்டுகோள்.

எமது சபையினால் பராமரிக்கப்பட்டு வந்த சபையின் கீழ் உள்ள பொதுக்கினறு இன்று சென்னல் கிராமம் 01ம் பிரிவில் ஜும்மா பள்ளி முன் உள்ள வளவில் பொதுக் கினறு உள்ளது. சுமார் 6,7 வருடங்களுக்கு முன் அந்தக் கிராமமே கினற்றினால் பயன் பெற்றது. தற்பொழுது குழாய் நீர் வந்த காரணத்தினால் பாழடைந்து காணப்படுகின்றது. அவை குளனி வீட்டுத் திட்டங்கள் ஆரம்பிக்கும் போது இதுவும் ஆரம்பிக்கப்பட்டது. இன்று அக்கினறு பாழடைந்த நிலையில் டெங்கு நொய் பரவக்கூடிய அபாயம் உள்ளது. கிணறு கண்டம் கண்டமாக வெடித்து உடைந்து விழுகின்ற சூழ்நிலையில் உள்ளது. வரட்சியான காலப்பகுதியில் அதற்கு அன்மித்த நிலம் 3, 4 மீட்டர் நீளமாக ஒரு சுரங்க வழியாக இடிந்து பக்கத்தில் இருக்கின்ற வீடு உடைந்து விடுகின்ற நிலையில் காணப்படுகின்றது. அந்த வீட்டின் உரிமையாளர் சாதாரன மீன் வியாபாரி. வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர். இந்த இடத்தை நேரில் பார்வையிட்டு ஒரு தீர்வினைப் பெற்று கொடுக்க வேண்டும் என்று தவிசாளர் அவர்களிடம் வேண்டுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் கூறிய விடயங்கள் தொடர்பாக நீங்கள் அறிந்திருப்பீர்கள். சம்மாந்துறையில் முதல் முதலாக வண்டில் சொந்தக்காரர்களுக்கு போமிட் எடுத்துக் கொடுத்த சரித்திரம் உள்ளது. இந்த நாட்டில் மண் அகழ்வு பற்றி எவ்வளவு சட்டம் இருந்தாலும் பெரிய வியாபாரமாக இன்று மாறி உள்ளது. எந்தளவுக்கென்றால் பாதைகள் அழிந்தாலும் பரவாயில்லை கனரக வாகனம் ஓட வேண்டும். இது நமது சம்மாந்துறைக்கு மட்டுப்படுத்தப்பட்ட விடயம். இதனை செய்வதானால் உரிய வண்டில் காரர்கள் நாட்டின் சட்டத்தை மதிக்க வேண்டும். இந்த சபையில் அவர்களது வண்டில்களைப் பதிந்து லைசன் எடுக்க வேண்டும். அடுத்து அவர்கள் சங்கங்களாக பதிய வேண்டும். சங்கத்திற்கு பேமிட் எடுத்துக் கொடுக்கலாம். இந்த ஊரின் முதுகெலும்பு விவசாயம் விவசாயத்தைப் பாதிக்கும் எந்த விடயத்திற்கும் நாம் துனை போக முடியாது. மணல் அகழ்வதென்றால் அதற்கு ஒரு முறை இருக்க வேணடும். இதற்கு சபை முன்னின்று செய்யலாம். அவர்கள் சட்டத்திற்கு அடிபனிந்து சபையில் பதிந்து சங்கங்களாக வருகின்ற போது அதனைச் செய்யலாம்.

பொதுக் கினறுகள் மக்களின் சொத்து. சிலர் கினறுகளை மூடுமாறும் கேட்டார்கள். ஆனால் அவ்வாறு செய்ய முடியாது. காரணம் நமது மூதாதேயர்கள் பாவித்தவைகள். மீண்டும் அந்நிலமை வரலாம். இன்னும் சில மாதங்கள் மழை பெய்யாவிட்டால் குடிப்பதற்குக்கூட நீர் இல்லாமல் விடலாம். அனைத்து குளங்களிலும் நீர் வற்றி மூடப்படுகின்ற நிலை உருவாகின்றது. கினறுகள் பொதுச் சொத்து அது மக்களின் சொத்து நமது மூதாதேயர்கள் இந்தக் கினறுகளில் முட்டிகளில் தன்னீர் சுமந்தார்கள். இவைகளை அந்தந்த சமூக அமைப்புக்கள் பராமரிக்க வேண்டும். சனசமூக நிலைகங்கள் கொந்துறாத்துகளின் மூலம் வருகின்ற பணத்தின் மூலம் அவர்களது பிரதேசத்தில் உள்ள வளங்களை பராமரிக்க வேண்டும். இதற்கு முன்மாதிரி சென்னல் கிராம சனசமூக நிலையம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம். ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மணல் அகழ்வு வண்டில் காரர்களுக்கு கொடுக் வேண்டும் என்று கூறுகின்றார்கள் அதற்கான இடம் எங்கிருந்து கொடுப்பது. நாங்கள் எங்களது வட்டை அழிந்து போகின்றது என்று எங்களது வட்டைக் குழு Letter head இல் பொலிசுக்கும் பிரதேச செயலகத்திற்கும் கடிதம் கொடுத்தோம். ஆனால் காப்புக்கட்டு இல்லாமல் செய்தார்கள் நமது ஊரின் வளம் நமது ஊரை விட்டு கொழும்க்குக்கூட செல்கின்றது. வண்டில் மண் ஏற்றி கயர் பள்ளிமுன் சேர்த்து பின்னர் லொறி மூலம் கண்டிக்கு ஏற்றிச் செல்லப்படுகின்றது. இதற்கு நாம் இடம் கொடுப்பதா? லொறிக்காரரைப் பிடித்து பொலிசுக்கு தொலைபேசியில் கூறினோம். ஆனால் எவரும் வரவில்லை. இதுதான் கசப்பான உண்மை.

**கௌரவ உப தவிசாளர் . வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது மல்வத்தை பிரதேசத்தில் அண்மையில் பொதுச் சந்தை ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு புதன் கிழமையும் வாராந்த சந்தை நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இன்று அந்த சந்தை மிகவும் பிரபல்யமாக சிறந்த முறையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. அதற்கான சந்தப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்த கௌரவ தவிசாளர் அவர்களுக்கும் எமது சபைக்கும் மல்வத்தை 02 பிரதிநிதிகளையும் சேர்த்து எனது மணமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நீங்களும் சந்தப்பம் கிடைத்தால் எங்களது சந்தைக்கு வந்து உங்களுக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்யலாம் என்றும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இவ்விடத்தில் ஒரு விடயத்தை நினைவு படுத்துகின்றேன். எமது சக கௌரவ உறுப்பினர் நஜீம் அவர்கள் விபத்துக்குள்ளாகியுள்ளார். அதனை நான் நேரில் கண்டேன் சபை சார்பாக அவருக்கு ஆறுதல் கூறலாம் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த சபையின் நடவடிக்கைகள் இனிதே முடிகின்றது.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
சம்மாந்துறை.

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
சம்மாந்துறை.